[1973 ஆகஸ்ட் 13

சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ள வெளிமாநிலக் கைதிகள்

*114 வினு—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் வெளி மாநிலத்தைச் சேர்ந்த கைதிகளின் எண்ணிக்கை எத்தனை?

(இ) அவர்கள் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்?

(உ) எந்தெந்த சிறைச்சாலைகளில் உள்ளனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 16.

(இ) திரிபுரா மற்றும் பாண்டிச்சேரி மாநிலக் கைதிகள்.

(உ) திரிபுராவைச் சார்ந்தவர்கள் கோவை மத்திய சிறையிலும், பாண்டிச்சேரி மாநிலக் கைதிகள் சேலம், சென்னை, திருச்சிராப்பள்ளி, கடலூர் மத்திய சிறைகளிலும் உள்ளனர்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனைபேர்கள் நம்முடைய சிறைச்சாலைகளில் இருக்கிறுர்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் சொன்னேன், மொத்தம் 16. திரிபுரா மற்றும் பாண்டிச்சேரி மாநிலக் கைதிகள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பங்களாதேஷ் கைதிகள் சிறையிலே இருக்கிறுர்களா, பூராவும் திருப்பி அனுப்பப்பட்டு விட்டார்களா அல்லது யாராவது இன்னும் இருக்கிறுர்களா? அவர்களுக்காக விசேஷமாகப் போடப்பட்ட அந்த வார்டர்களுக்கு விசேஷ சலுகை கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வார்டர்களைப்பற்றிய தகவல் இல்லை. பெரும்பாலும் போய்விட்டார்கள். அதனுல்தான் இந்தக் கணக்கில் தரவில்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, நம்முடைய சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கும் வெளி மாநிலத்தைச் சேர்ந்த அவர்கள் எப்படிப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்பதை அறிவிக்க இயலுமா?

1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் கேள்வி மற்ற மாநிலங்களைச் சேர்ந்த கைதிகள் இங்கே அனுப்பப்பட்டு, நம்முடைய சிறைகளில் வைக்கப்பட்டிருக்கிறார்களா என்பது. அதைப்பற்றிய பதில்தான் இது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலிலே வங்க தேச கைதிகள் இங்கே வைக்கப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள், அதற்கான செலவை மத்திய அரசு தந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய அரசினுடைய வேண்டுகோளும், மேற்கு வங்க அரசினுடைய வேண்டுகோளும் ஏற்கப்பட்டு அவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அதற்கான செலவை அந்தந்த மாநில அரசு தர ஒப்புக்கொண்டுள்ளன.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, கள்ள டாலர் அடித்த வெளிநாட்டுக் கைதிகள் நம்முடைய சிறைச்சாலைகளில் இருக்கிறார்கள். அந்தக் கேசில் சம்பந்தப்பட்டவர்கள் கோயம்புத்தூர் சிறைச்சாலையில் இருந்தாரே, அந்த கேஸ் சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அவரைப்பற்றி இதில் சொல்லப்படவில்லையே, ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் என்னிடத்திலே இல்லை.

Persons arested on Counter-feit charges

* 115 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether anybody was arrested in the Central Jail, Coimbatore on charge of trying to print twenty rupees counterfeit notes in March 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 20 ரூபாய் நோட்டுக்களைக் கள்ளத்தனமாக அச்சிடும் முயற்சியில் பாஸ்கரன் என்ற காவல் கைதிக்கு உதவி செய்ததாகச் சந்தேகத்தின் பேரில் கோயம்புத்தூர் மத்திய சிறையைச் சேர்ந்த பரமேஸ்வரன், கண்ணப்பன், தாஸ்தகிரி என்ற மூன்று காவலர்கள் கைது செய்யப்